really bring in a lot of money to this mechanised plant? I have always found that this plant does not carry the bricks to the house of the person who asks for them. If a person wants to get bricks from this plant, he has to go and request them and send them a lorry and then only, they will transport the bricks. May I ask the Hon. Minister how the brick plant can thrive if this is the condition and how it can reach the capacity of 60,000 while it is now manufacturing only 35,000?

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I am sorry I am not able to take the compliments of the hon. Member, for this factory runs at a loss of Rs. 35 lakhs because it is not able to manufacture even 50 per cent of the targeted production capacity of 66,000.

THIRU G. VASANTHA PAI: Sir, may I tell the Hon. Minister that the fact is that bricks are not moving from there, not because there is no demand but because there are no transport facilities? I asked for several consignments of bricks from that factory, but they always asked me to send the lorry.

MR. CHAIRMAN : There are so many lorries available for hire.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, as regards the order for supply of bricks placed by the hon. Member, we will try to supply him the bricks.

* 312 *Q.*—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government Mechanised Brick Plant at Thirumazhisai is operating at a loss now; and

(*b*) if so, the details thereof?

1974 ஏப்ரல் 11]

அரசு இயந்திர செங்கல் தொழிற்சாலே, திருமழிசை

திரு. எஸ். வெள்ளபாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) திருமழிசையிலுள்ள அரசு விசைச் செங்கற் சூளை தற்போது லாபத்தில் இயங்கி வருகிறதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) 1967-68-ம் ஆண்டு முதல் 1971-72ம் ஆண்டு வரை மொத்த இழப்பு ரூ. 37,71,604-43.

(பிற்பகல் 4-40)

THIRU A. R. DAMODARAN: Sir, is the loss due to the fact that the factory is working at less than 50 per cent of its installed capacity and if so, what are the real difficulties? Is it due to the sale prices being low or lack of transport facilities? May I know what exactly is the trouble in these factories?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, 66 ஆயிரம் செங்கற்கள் செய்ய வேண்டும் என்பது ஒப்பந்தம். அப்போது யூகோஸ்லாவியா நாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட அவர்களுடைய இயந்திரத் திறனுடைய அடிப்படையிலே அவர்களோடு செய்துகொண்ட ஒப்பந்தம் 66 ஆயிரம் செங்கற்களுக்குத்தான். ஆனால் இதுவரையில் எப்போதுமே 34 ஆயிரம் 40 ஆயிரத்திற்கு மேலே போக முடியவில்லை. இதற்கான காரணங்கள் ஆராயப்பட்டன. சொல்லப்படும் எந்தக் காரணமும் எனக்குச் சரியாகப்படவில்லை. ஆகவே 66 ஆயிரம் செங்கல் உற்பத்தி செய்தால்தான், லாபம் கிடைக்கும் என்று நம்பி, அந்த இயந்திரத்தை வாங்கியதுதான் தவறு என்று நான் கருதுகிறேன். இந்த நிலையை மாற்றுவதற்கு என்ன பரிகாரம் என்று ஆராய்ந்துகொண்டிருக்கிறோம். இதுபோல இன்னும் மெகனைஸ்டு ப்ளாண்ட்ஸ் இருக்கின்றன. அவற்றுக்கும் அரசாங்கம் உதவி கொடுத்திருக்கின்றது. அவற்றிலும் நஷ்டம்தான். தனியார் செங்கற்சூளைகளில் நிலை என்ன என்று ஆராய்ந்து பார்க்கும்படி, அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டேன். அங்கும் இப்படித்தான் நஷ்டம் வருகின்றது என்று அவர்கள் சொல்லுகின்றார்கள். 1963லே யூகோஸ்லாவியா நாட்டோடு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றார்கள். அந்த அதிகாரிகளோடு நானே பேசிப் பார்த்தேன். அவர்களும் சரியான முகாந்திரம் கொடுத்ததாகத் தெரியவில்லை. இதற்கு இடையிலே

செக்கோஸ்லாவாகியாவோடு—எங்கள் காலத்திலே இல்லை, எங்களுக்கு முன்பே ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றார்கள். அவர்களுடையதோடு, நஷ்டம் அடையும் ப்ரிக் ப்ளாண்ட்டோடு, சேர்த்துப் போட்டாலாவது நஷ்டம் வராமலிருக்குமா என்று பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம்.

திரு. ஜி. பராங்குசம் : தலைவரவர்களே, இந்த இயந்திரங்கள் எந்த ஆண்டில் வாங்கப்பட்டன? எந்த அதிகாரியால் பரிசீலிக்கப்பட்டு வாங்கப் பட்டன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அதிகாரிகளுடைய பெயர்கள் நினைவில்லை. 1963 ஆம் ஆண்டிலே அது அனுமதிக்கப்பட்டிருக் கின்றது என்று மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

THIRU G. VASANTHA PAI : Sir, will the Government consider putting persons with industrial experience in charge of the plant, instead of putting I.A.S. Officers, and try to increase the sale of bricks?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, தொழிற்சாலைக்கு இல்லாவிட்டாலும், அந்த இலாகாவிற்கு அப்போது ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி பொறுப்பேற்றிருந்தார். இப்போது அதை ஒரு தனி வாரியமாக அமைத்து, அதிலே ஒரு திறமை வாய்ந்த ஸ்கில்டு அதிகாரி, ஜாயின்ட் டைரெக்டராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். இருந்தாலும் The basic fact remains the same.

THIRU A. R. DAMODARAN : Sir, what is the boiler fuel that is used—is it firewood, coal or furnace oil? Is there any proposal to hand over this unit to the Housing Board which may be able to utilise it to a better extent?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இதை ஹௌஸிங் போர்டுக்கு ஒப்படைக்கலாமா என்று கேட்கின்றார்கள். நான் ஹௌஸிங் அமைச்சராக இருந்தபோது இதைப்போலுள்ள ஒரு தொழிற்சாலையை தொழில் இலாகாவிற்கு ஒதுக்கிவிடலாம் என்று முடிவெடுத்து, அப்போது தொழில் இலாகாவிற்கு அதைத் தள்ளிவிட்டோம். இப்போது நான் தொழில் இலாகாவிற்கு வந்திருக்கிறேன். இந்த இரண்டையும் சேர்த்து ஒரே இடத்தில் போட்டால் ஓவர்ஹெட் சார்ஜ் குறையும், இந்த நஷ்டத்தையும் குறைக்கலாம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இதைப் பரிசீலித்துக்கொண்டிருக் கிறோம்.

1974 ஏப்ரல் 11]

THIRU G. VASANTHA PAI : Sir, the Housing Board accounts, I am told, are not made up after 1965. At least these accounts have gone up to 1972. Will the Government see that they also come to the same level and then put them togather?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அங்கத்தினர் நினைப்பதைப்போல ஹௌசிங் போர்டு மீது குறை சொல்ல முடியாது. அது திறமையாக மக்களுக்குப் பணியாற்றி வருகின்றது. இதை அவர்கள் எடுத்துக் கொண்டுள்ள காரணம் அவர்களுக்குத் தேவையான செங்கற்களை அவர்களே செய்து பயன்படுத்திக்கொண்டால் இப்படிப்பட்ட நஷ்டம் இல்லாது இருக்குமோ என்று முடிவெடுத்தது. ஆனால் அதில் ஏற்பட்ட அனுபவத்தின் காரணமாக அவர்களுக்கே பயம் ஏற்பட்டுவிட்டது. பிறகு தொழில் இலாகா நடத்தும் செங்கற் சூளையோடு சேர்த்துவிட வேண்டும் என்று முடிவெடுத்தார்கள். இப்போது நாம் உற்பத்தி செய்யும் செங்கல் அவ்வளவையும் அரசாங்கமே வாங்கிக்கொண்டால் பெரும் நஷ்டம் இல்லாத நிலை ஏற்படலாம், விலையைக் குறைத்துச் சொல்ல வேண்டிய நிலையும் இல்லாது இருக்கும் என்று இதைப் பரிசிலனை செய்துகொண்டிருக்கிறோம்.

திரு. எஸ். டி. ஆதித்தன் : தலைவரவர்களே, தனியார் துறையிலுள்ள மற்ற இரண்டு தொழிற்சாலைகளிலே இருக்கும் இயந்திரங்கள் யூகோஸ்லாவியாவிலிருந்து வந்தவைதானா? யூகோ இயந்திரங்கள் தவிர வேறு நாட்டு இயந்திரங்கள் ஏதாவது நமது மாநிலத்தில் இயங்கி வருகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, வெளிநாட்டு இயந்திரங்கள் எல்லாமே இப்படித்தான் இருக்கின்றன. எந்த நாட்டு இயந்திரம் என்பது முக்கியமில்லை.

Service Clubs

* 313 *Q.*—THIRU S. NARAYANASWAMY (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether members of the Judiciary both on the State and District levels can be members of Service Clubs; and

(*b*) if so, whether they can contest for posts in those organisations and canvass for votes?